**செய்தி வெளியீடு எண்: 495** **நாள்: 26.07.2018**

# செய்தி வெளியீடு

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி 01/07/2017 அன்று முதல் அமுல்படுத்தப்பட்டது. அன்று முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான பதிவு எண் பெறுதல், நமூனாக்கள் சமர்ப்பித்தல், வரி செலுத்துதல் ஆகிய சேவைகளை மத்திய அரசினால் வடிவமைக்கப்பட்ட www.gst.gov.in என்ற இணையதளம் மூலம் அனைத்து வரி செலுத்துவோரும் பயன்படுத்திக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது அனைத்து வரி செலுத்துவோர்/வணிக சமூகத்தினர் மற்றும் அனைத்து பொது மக்களும் எளிதில் கையாளும் வகையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான சில சேவைகளை எங்கும் எப்போதும் பயன்படுத்திக் கொள்ள வசதியாக கைபேசி செயலி ஒன்று தமிழ்நாடு வணிகவரித் துறையினால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ‘TNCTD-GST’ எனப் பெயரிடப்பட்டுள்ள செயலி ‘Google Play Store’–ல் தற்போது கிடைக்கப்பெறும். இந்த செயலியை எந்தக் கட்டணமுமின்றி ‘Google Play Store’ இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த Android செயலி அனைத்து Android ஸ்மார்ட்போன்கள் மூலம் பயன்படுத்த முடியும். இந்தச் செயலியில் கீழ்க்கண்ட சேவைகள் வழங்கப்படுகிறது.

| வ.எண் | பயன்பாடு | விவரம் |
|---|---|---|
| 1 | வணிக விவரம் தேடல் | இந்த வசதி மூலம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பதிவு எண், சட்டப்படியான பெயர் அல்லது வருமான வரி கணக்கு எண் ஆகிய ஏதேனும் ஒன்றை உள்ளீடு செய்து வணிகரது மற்ற விவரங்களை பெற முடியும். |
| 2 | மனுக்களின் நிலை அறிதல் | மாநிலத்தில் உள்ள வரி செலுத்துவோர் தங்களது புதிய பதிவு, முக்கிய வணிகர் விவர திருத்தம் (அ) பதிவை ரத்து செய்தல் போன்றவற்றுக்காக அளிக்கப்பட்ட மனுக்களின் தற்போதைய நிலையினை அதற்கென பெறப்பட்டுள்ள ARN எண்ணைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். |
| 3 | வட்டித் தொகை கணக்கிடுதல் | வரி செலுத்துவோரின் சில விதி மீறல்களுக்காக சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்குட்பட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள வட்டித் தொகையினை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். |

| | | |
|---|---|---|
| 4 | தங்களுக்கான அதிகார எல்லையினை தெரிந்து கொள்ள | தங்களது வணிகப் பகுதியின் அஞ்சலக குறியீட்டின் மூலம் தங்களுக்கான வரி விதிப்பு வட்டம் மற்றும் கோட்டம் பற்றிய விவரம் அறிய முடியும். |

அனைத்து வரி செலுத்துவோர், வணிக சமூகத்தினர் மற்றும் பொது மக்கள் அனைவரும் இந்த கைபேசி செயலி வசதியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**